**தேதி:- 16.08.2019 அ.வ. எண்.173/2004 வா.சா.2 (அம்ஜத்ராணி)**

**குறுக்கு விசாரணை:-**

நான் 1970 ல் பிறந்தேன். தேதி, மாதம் தெரியாது நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். பள்ளிமாற்றுச்சான்றிதழைப் பார்த்தால் என் பிறந்த தேதி தெரியவரும் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்ய வழக்கறிஞரிடம் என் அக்கா அனார்கலிதான் தகவல் சொன்னார். தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்று வழக்குரையிலோ நிருபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை. என் பாட்டனாருக்கும் அவரது தகப்பனாருக்கும் சொத்து பாத்தியப்பட்டதாக காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். சாட்சியிடம் என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளீர்கள் என்று கேட்டதற்கு என் பாட்டனார் என் தகப்பனார் பெயரில் பத்திரம் 1967 ல் எழுதி வைத்தார் என்று கூறுகிறார். 1963 ல் என் தகப்பனாரும், அவரது உடன்பிறந்தவர்களும் சொத்தை பிரித்துக் கொண்டார்கள். அதுகுறித்து வழக்குரையில் சொல்லவில்லை. சொத்து யாருக்கு எப்படி பாத்தியப்பட்டது என்று வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரையில் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது என்று வாதிகள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது. மேற்படி பத்திரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்து சம்பந்தமாக இந்த வழக்கு தவிர வேறு சில வழக்குகளும் இருந்தது என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார் / கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.